## வெப்பிலியில் ரூ. 74 ஆயிரத்துக்கு தேங்காய் ஏலம்

**பெருந்துறை, மார்ச் 7:** சென்னிமலை, வெப்பிலி துணை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ரூ.77 ஆயிரத்துக்கு தேங்காய் ஏலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஏலத்தில் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 5 ஆயிரத்து 532 தேங்காய்களை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், ஒரு கிலோ குறைந்தபட்சமாக ரூ.21.21க்கும், அதிகபட்சமாக ரூ.30.49க்கும் ஏலம் போனது. மொத்தம் 3 ஆயிரத்து 49 கிலோ எடையுள்ள தேங்காய்கள் ரூ.74 ஆயிரத்து 357க்கு விற்பனையாயின.

## ஈரோடு ஜவுளி சந்தையில் சில்லறை விற்பனை அதிகரிப்பு

**ஈரோடு, மார்ச் 7:** வெளி மாநில வியாபாரிகள் வருகையால் ஈரோடு ஜவுளி சந்தையில் சில்லறை விற்பனை அதிகரித்தது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் காரணமாக கடந்த ஒன்றரை மாதமாக ஈரோடு ஜவுளி சந்தை வியாபாரம் மந்தமாக இருந்தது. குறிப்பாக வெளி மாநில வியாபாரிகள் வராததால் மொத்த வியாபாரம் 5 சதவீதம் அளவு மட்டுமே நடைபெற்றது. இதனால் ரூ.150 கோடி மதிப்பிலான துணிகள் தேங்கின.

இந்நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் முடிவடைந்ததால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. இதனையடுத்து, செவ்வாய்க்கிழமை இரவு ஜவுளி சந்தை வழக்கம்போல கூடியது.

இந்த வார சந்தைக்கு கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய வெளி மாநிலங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்தனர். இதனால் மொத்த வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெற்றது.

இதுபோல தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வியாபாரிகள் வந்திருந்தனர். தற்போது கோயில் திருவிழாக்கள் நடைபெற்று வருவதால் மஞ்சள், சிவப்புத் துண்டு, வேட்டிகள், சேலைகள் விற்பனை அதிகமாக இருந்தது. சில்லறை வியாபாரம் மட்டும் 30 சதவீதம், மொத்த வியாபாரம் 25 சதவீதம் நடைபெற்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

# 3,552 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.70.06 கோடி கடன் தள்ளுபடி சான்று

### அமைச்சர் வழங்கினார்



மகளிர் சுயஉதவிக் குழு பொறுப்பாளர்களிடம் கடன் தள்ளுபடி சான்றினை வழங்குகிறார் வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி.

**ஈரோடு, மார்ச் 7:** மகளிர் சுயஉதவிக் குழுவினர் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற ரூ.70.06 கோடி கடனை தள்ளுபடி செய்யப்பட்டதற்கான சான்றினை வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்.

ஈரோடுமாவட்டத்தில்3,552மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள 35,907 உறுப்பினர்கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன் ரூ.70.06 கோடி தள்ளுபடி செய்யப்பட்டதற்கான சான்றிதழ்கள் வழங்கும் விழா ஈரோட்டில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சந்தோஷினி சந்திரா தலைமை வகித்தார். மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், அந்தியூர் எம்எல்ஏ ஏ.ஜி.வெங்கடாசலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் கலந்து கொண்ட அமைச்சர் சு.முத்துசாமி, மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி சான்று மற்றும் மாவட்டத்தில் புதிதாகதொடங்கப்பட்ட14நியாயவிலை கடைகளை தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பெற்ற கடன்கள் 31.3.2021 தேதியில் உள்ள நிலுவைத் தொகையில் மாநிலம் முழுவதும் ரூ.2674.64 கோடி தள்ளுபடி செய்யப்படும் எனமுதல்வர் அறிவித்தார். அதன்படி ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் மகளிர் சுயஉதவிக் குழுவினர் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

மாவட்டத்தில் 3,552 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 35,907 மகளிர் உறுப்பினர்கள் பெற்ற கடன் அசல், வட்டி, அபராத வட்டி மற்றும் இதர செலவினங்கள் என மொத்தம் ரூ.70.06 கோடி மதிப்பிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஈரோடு மேற்கு, அந்தியூர், ஈரோடு கிழக்கு, மொடக்குறிச்சி, பவானிசாகர் மற்றும் பவானி ஆகிய தொகுதிகளுக்கு உள்பட்ட பகுதிகளில் புதிதாக 14 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த புதிய நியாய விலைக் கடைகள் மூலம் 10,186 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவர் என்றார்.

விழாவில் ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் நவமணி கந்தசாமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் க.ராஜ்குமார், துணைப் பதிவாளர்கள் நர்மதா, ரவிச்சந்திரன், கந்தசாமி, ராமநாதன், மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் பழனிசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தெப்பக்காட்டில் பாலம் கட்டுமானப் பணி: அமைச்சர் ஆய்வு

**கூடலூர், மார்ச் 7:** முதுமலை புலிகள் காப்பகத்தின் மையப் பகுதியான தெப்பக்காட்டில் ரூ.1.99 கோடி மதிப்பில் நடைபெறும் பாலம் அமைக்கும் பணியை பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

காட்டாற்று வெள்ளம் செல்லக்கூடிய தலைக்குந்தா, கல்லட்டி, தெப்பக்காடு சாலையில் கட்டப்பட்டிருந்த சிறுபாலம் வெள்ளப் பெருக்கினால் அடித்துச் செல்லப்பட்டது. இப்பகுதியில் ரூ.1.99 கோடி செலவில் மீண்டும் பாலப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி மந்தமாக நடைபெற்று வருவதாக நீலகிரி மக்களவை உறுப்பினர் ஆ.ராசா, மாவட்ட ஆட்சியர் சா.ப.அம்ரித் ஆகியோர் தெரிவித்தனர்.

இதையடுத்து, இப்பணி குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மழைக் காலத்துக்கு முன்பாக பணிகளை முடித்தால்தான் பொது மக்கள் செல்ல வசதியாக இருக்கும். எனவே பணியை விரைவுபடுத்த நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள், வனத் துறை அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

ஆய்வின்போது, ஆ.ராசா எம்.பி., ஆட்சியர் அம்ரித், முதுமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் அருண்குமார், வருவாய் கோட்டாட்சியர்கள் முகமது குதுரத்துல்லா, துரைசாமி, நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்புப் பொறியாளர் கண்ணன், கோட்டப்பொறியாளர் குழந்தைராஜ் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வேகத் தடைக்கு வண்ணம் பூச்சு: எம்.எல்.ஏ. நடவடிக்கை

**பெருந்துறை, மார்ச் 7:** பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று விபத்துக்கு காரணமான வேகத் தடைக்கு நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் வண்ணம் பூசி நடவடிக்கை மேற்கொண்டனர்.

தேசிய நெடுஞ்சாலையில், பெருந்துறை புறவழிச் சாலையிலுள்ள ஆசிரியர் காலனி பகுதியில் சாலையில் வேகத்தடை அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், வேகத் தடை இருப்பதை எச்சரிக்கும் அறிவிப்புப் பலகை மற்றும் வேகத் தடையின் மீது வெள்ளை வண்ணக் கோடு அடிக்கப்படவில்லை. இதனால், தொடர்ந்து விபத்து ஏற்பட்டு வந்தது. இந்நிலையில், வேகத் தடை இருப்பது தெரியாமல் திங்கள்கிழமை இரவு இருசக்கர வாகனத்தில் வந்த இருவரும், செவ்வாய்க்கிழமை காலை இருசக்கர வாகனத்தில் அழைத்து வரப்பட்ட மூதாட்டியும் விபத்தில் சிக்கினர்.

இதையடுத்து, விபத்துக்கு காரணமான வேகத் தடை மீது வண்ணம் பூச வலியுறுத்தி பெருந்துறை சட்டப் பேரவை உறுப்பினர் ஜெயக்குமாரின் வாட்ஸ் அப் எண்ணுக்கு பொதுமக்கள் கோரிக்கை அனுப்பினர்.

இதைத் தொடர்ந்து, சட்டப் பேரவை உறுப்பினர் ஜெயக்குமார், உடனடியாக தேசிய நெடுஞ்சாலைத் துறை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட வேகத் தடைக்கு உடனடியாக வண்ணம் அடிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, உடனடியாக நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் வேகத் தடைக்கு வெள்ளை வண்ணம் பூசி நடவடிக்கை மேற்கொண்டனர்.

# ஈரோட்டில் 20 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

### ஆட்சியர் தகவல்

**ஈரோடு, மார்ச் 7:** தடப்பள்ளி-அரக்கன் கோட்டை பாசனப் பகுதிகளில் 20 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக ஈரோடு மாவட்ட ஆட்சியர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனப் பகுதிகளில் விளைந்துள்ள நெல்லினை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யும் பொருட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஈரோடு மண்டலம் மூலம் மொத்தம் 20 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இதில் கள்ளிப்பட்டி 1 மற்றும் 2, ஏளூர், டி.என்.பாளையம், நஞ்சை புளியம்பட்டி 1 மற்றும் 2, கரட்டடிப்பாளையம், என்.ஜி.பாளையம் 1 மற்றும் 2, புதுவள்ளியம்பாளையம், புதுக்கரைப்புதூர் 1 மற்றும் 2, காசிபாளையம், கூகலூர், கருங்கரடு, சவுண்டப்பூர், பெருந்தலையூர், மேவானி, நஞ்சைதுறையம்பாளையம், கொண்டையம்பாளையம் ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் விற்பனை செய்ய நேரில் சென்று முன்பதிவு செய்துகொள்ள வேண்டும்.

முன்பதிவு செய்ய கிராம நிர்வாக அலுவலர் சான்று, நெல் விளைந்த நிலத்தின் பட்டா, சிட்டா, அடங்கல், விவசாயியின் ஆதார் அட்டை நகல், விவசாயியின் வங்கிக் கணக்கு புத்தக நகல், விவசாயின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2 ஆகிய ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

அரசு நிர்ணயித்துள்ள தரம் மற்றும் 17 சதவீதத்துக்குள் ஈரப்பதம் உள்ள நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படும். ஏ கிரேடு நெல் குவிண்டாலுக்கு ரூ.2,160, பொது ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.2,115 வழங்கப்படும். கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னிமலையில் விசைத்தறி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

**பெருந்துறை, மார்ச் 7:** சென்னிமலை வட்டார விசைத்தறி தொழிலாளர்களுக்கு ஒப்பந்தப்படி வழங்கி வந்த கூலியை தன்னிச்சையாக குறைத்துள்ளதை கண்டித்தும், குறைத்த கூலியை நிலுவையுடன் சேர்த்து வழங்க வலியுறுத்தியும் ஏஐடியூசி விசைத்தறி தொழிலாளர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னிமலை, பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துகு ஏஐடியூசி விசைத்தறி தொழிலாளர்கள் சங்கத் தலைவர் எம். செங்கோட்டையன் தலைமை வகித்தார்.

இதில், மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி, சுமைதூக்கும் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். பொன்னுசாமி, கட்டடத் தொழிலாளர் சங்க மாவட்டப் பொருளாளர் எஸ்.ராஜ்குமார், கைத்தறி நெசவாளர் சங்க ஒன்றியச் செயலாளர் ஆர்.ரவி, விசைத்தறி தொழிலாளர் சங்க ஒன்றியச் செயலாளர் பி.கிருஷ்ணமூர்த்தி, சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் என்.பிரமுத்து, கே.லிங்கேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர்.

சென்னிமலை வட்டாரத்தில் செயல்பட்டு வரும் சில விசைத்தறி கூடங்களில், விசைத்தறி தொழிலாளர்களுக்கு ஒப்பந்தப்படி வழங்கி வந்த கூலியில் 5 முதல் 20 சதவீதம் வரை தன்னிச்சையாக குறைத்துள்ளனர். சில விசைத்தறி கூடங்களில், இந்த வாரம் முதல் கூலி குறைத்து வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர். கூலி குறைப்பை ஏற்க மறுத்த தொழிலாளர்கள், பெற்ற முன் பணம் (அட்வான்ஸ் தொகை) திருப்பிக் கொடுத்துவிட்டு, வேலையை விட்டு நின்று விடுமாறு நிர்பந்தப்படுத்துகின்றனர்.

இப்பிரச்னையில், சென்னிமலை வட்டார விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கமும், தமிழ்நாடு அரசும், மாவட்ட நிர்வாகமும், தொழிலாளர் துறையும் உடனடியாக தலையிட்டு குறைத்த கூலியை திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

**ஈரோடு, மார்ச் 7:** மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஈரோட்டில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு நகரச் செயலாளர் பி.சுந்தரராஜன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஆர்.ரகுராமன், செயற்குழு உறுப்பினர்கள் ப.மாரிமுத்து, ஆர்.கோமதி, எஸ்.சுப்ரமணியன் உள்ளிட்டோர் பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில் சமையல் எரிவாயு விலை உயர்வை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. நிதிநிலை அறிக்கையில் 100 நாள் வேலை திட்டத்துக்கு கடந்த ஆண்டுகளில் ரூ.1.10 லட்சம் கோடி ஒதுக்கிய நிலையில், இந்த ஆண்டு ரூ.60 ஆயிரம் கோடி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏழைகளுக்கான உணவு மானியம் ரூ. ஒரு லட்சம் கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரிச் சலுகை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை கண்டித்து முழக்கம் எழுப்பப்பட்டது.

## சுதா மருத்துவமனை சார்பில் தீவிர சிகிச்சை கருத்தரங்கம்

**ஈரோடு, மார்ச் 7:** ஈரோடு சுதா மருத்துவமனை, இந்திய மயக்க மருந்தியல் நிபுணர்கள் சங்கம் சார்பில் பனாசியா 2023 தீவிர சிகிச்சை கருத்தரங்கம் ஈரோட்டில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்க நிகழ்வுக்கு சுதா மருத்துவமனையின் தலைவர் டாக்டர் டி.கந்தசாமி தலைமை வகித்தார். கருத்தரங்கை இந்திய மருத்துவ சங்க முன்னாள் மாநிலத் தலைவர் சி.என்.ராஜா, இந்திய மயக்க மருந்தியல் நிபுணர்கள் சங்க முன்னாள் மாநிலத் தலைவர் முத்துகிருஷ்ணன் ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

இதில் சுதா மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் சுதாகர் பேசுகையில், புற்றுநோயை மிக துல்லியமாக கண்டறிவதற்கும் மற்றும் சிகிச்சை அளிப்பதற்கும் சுதா மருத்துவமனையில் அதிநவீன மருத்துவ சாதனங்கள் விரைவில் நிறுவப்படவுள்ளன என்றார்.

கருத்தரங்கில் சுமார் 500 மருத்துவர்கள் பங்கேற்று தீவிர சிகிச்சை குறித்து பல தகவல்களையும் பகிர்ந்துகொண்டனர். 20க்கும் மேற்பட்ட தலைப்புகளில் உரைகளும்,விவாதங்களும் நடைபெற்றன. அமைப்புக் குழுவின் செயலர் டாக்டர் அமுதா நன்றி கூறினார்.

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,**
**மண்டல அலுவலகம், ஈரோடு.**

**பெரியசேமூர் கிளை அலுவலகத்திற்கு வாடகைக்கு இடம் தேவை**

பெரியசேமூர் கிளை அலுவலகத்திற்கு, தரைதளத்தில், வாடிக்கையாளர்கள்மற்றும்பணியாளர்கள்தங்கள்வாகனங்களை நிறுத்தும் வசதியுடன், தோராயமாக **1800 சதுரடி** உள்பரப்புடைய **(Carpet area)** கட்டிட இட வசதி கொண்ட, உடனே பயன்படுத்த தக்க வகையில் உள்ள கட்டிடம் **Lease /** மாத வாடகைக்கு தேவை.

விருப்பமுள்ள நபர்கள் இசைவு கடித படிவத்தை வங்கியின் மண்டல அலுவலகத்தில் வேலை நேரங்களில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது வங்கியின் இணையதளம் **www.iob.in**-ல் இருந்து பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தேவையான இணைப்புகளுடன் **14.03.2023** அன்று மாலை **5** மணிக்கு முன்பாக பின்வரும் முகவரிக்கு வந்து சேர வேண்டும்.

**முதன்மை மண்டல மேலாளர்,**
**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,**
**மண்டல அலுவலகம் : IOB டவர்ஸ், பார்க்-சத்தி ரோடு சந்திப்பு, ஈரோடு - 638 003. போன் : 0424-2226273 / 91235 17051**

ADITYA BIRLA CAPITAL
**PROTECTING INVESTING FINANCING ADVISING**
**ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிட்.**

பதிவு அலுவலகம் : இந்தியன் ரேயான் காம்பௌண்ட், வேரவல், குஜராத் - 362266. கிளை அலுவலகம் : அலகு #10 & 12, 4ஆவது தளம், ஒவல் வெங்கட் நாராயண் சாலை, தி.நகர், சென்னை - 600 017, கிளை அலுவலகம் : எண் 739, 2ஆவது தளம், அவினாசி சாலை, அண்ணா சிலை, கோயம்புத்தூர் - 641018.

**"பிற்சேர்க்கை IV-A"**
**[பார்க்க விதி 8(6)]**
**அசையாச் சொத்துகளுக்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 (54/2002), விதி 8(6)-இன் கீழான அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் GV டிரேடர்ஸ், GV டிரேடிங் கம்பெனி, திரு.கோவிந்தராஜுலு, திருமதி சந்திரா மற்றும் திரு.அரவிந்த் ஆகிய கடன்தாரர்கள்/கூட்டுக் கடன்தாரர்கள்/அடமானதாரர்களிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்தவருக்குவர வேண்டியுள்ள 30.10.2022 நாள்படியான ரூ.6,64,78,395/- (ரூபாய் ஆறு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) தொகையைத் தொகை பெறப்படும் நாள் வரையான மேல் வட்டி மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்து திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் ஈடுபெற்று கடனளித்த ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 08.07.2022 அன்று நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் 24.03.2023 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித் தொகை (EMD) விவரங்கள் பின்வருமாறு :

| அசையாச் சொத்தின் விவரம் | குறைந்தபட்ச விலை | டேவணித் தொகை (EMD) |
|---|---|---|
| திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை சார்பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், எண் 44 கணக்கம் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த SF எண் 47/1, இதிலடங்கிய புஞ்சை ஏக்கர் 0.80 நிலங்கள் ஒப்புதல் எண் Ma.Va/Na.Vu.Ee. எண் 1158/1991-இன்கீழ் "விக்னேஸ்வரா கார்டன் லேஅவுட்" என்ற பெயரில் குடியிருப்புகளாக மேம்படுத்தப்பட்டு லேஅவுட் செய்யப்பட்டது. இதிலடங்கிய மனை இட எண் 6. இதன் எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு : லோகநாதன் அவர்களின் சொத்துக்கு வடக்கில், 23 அடி அகலமுள்ள கிழக்கு மேற்கு லேஅவுட் சாலைக்குத் தெற்கில், மனை இட எண் 7-இல் உள்ள வீட்டுக் கட்டடத்திற்குக் கிழக்கில், 60 அடி அகலமுள்ள ஹைவே சாலைக்கு மேற்கில். இவற்றுக்கிடையே உள்ள அளவு : கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 59'0" அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 71'6" அடி, தெற்கு வடக்காக இரண்டு பக்கமும் - 43'0" அடி. பரப்பளவு 2805.75 சதுர அடி அல்லது 260.66 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் டர்சல்கட்டடம் உட்பட. இத்துடன் கதவுகள் ஜன்னல்கள், நீர் இணைப்பு, மின்சார இணைப்பு மற்றும் இரண்டின் முன்வைப்புத் தொகைகள், பொதுப் பயன்பாட்டிற்காக பயன்படுத்தும் லேஅவுட் சாலைகள் மீதான உரிமைகள் மற்றும் பொது வழிப்பாதைகள் முதலானவற்றையும் சேர்த்து. நகராட்சி சர்வேப்படி இந்தச் சொத்து வார்டு எண் F, பிளாக் எண் 18, TS எண் 6 (பாகம்), TS வார்டு எண் 31-இல் அமைந்துள்ளது. | ரூ. 61,75,491/- | ரூ. 6,17,549/- |

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடுபெற்று கடனளித்த நிறுவனத்தின் www.adityabirlafinance.com அல்லது https://sarfaesi.auctiontiger.net இணையதளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

நாள் : 07.03.2023
இடம் : கோயம்புத்தூர்
கடன் கணக்கு எண்கள் : 80001064, 80002291, 80001065 & 80002305

அதிகாரப்பூர்வ அலுவலர்
ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பில்
(9943998338)

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

பெதப்பம்பட்டி கிளை :
VG பில்டிங்ஸ், தாராபுரம் ரோடு
பெதப்பம்பட்டி – 642205.
மொபைல் : 94892 05921,
இமெயில் : petcoi@bankofbaroda.com

**தங்க நகை ஏல அறிவிப்பு**

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர் **பேங்க் ஆப் பரோடா வங்கி, பெதப்பம்பட்டி கிளை** மூலம் நகை மற்றும் பிற கடன்கள் பெற்று தவணை தவறி பணம் செலுத்தாமல் உள்ளார். நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை கடன்தாரர் கடன் நிலுவை பாக்கிகளை செலுத்த தவறி உள்ளதால் அடகு வைத்த தங்க நகைகளை **15.03.2023 புதன்கிழமை மாலை 3.30 மணி**யளவில் வங்கி வளாகத்தில் பகிரங்கமாக ஏலம் விடுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த ஏலத்தின் மூலம் ஏதேனும் கூடுதல் தொகை உபரியாக பெறப்பட்டால் அது இந்த கடன்தாரர் பெயரிலுள்ள வேறு கடன் நிலுவைக்கு வரவு வைக்கப்படும். மேலும் ஏலத்தினால் ஏதேனும் பற்றாக்குறை ஏற்பட்டால் அந்த தொகையினை கடன்தாரரிடம் அல்லது வாரிசுதாரரிடம் இருந்து சட்டபூர்வமாக வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் பேங்க் ஆப் பரோடாவுக்கு எந்த முன்னறிவிப்புமின்றி ஏலத்தேதியை தள்ளி வைப்பதற்கோ அல்லது ரத்து செய்வதற்கோ உரிமை உள்ளது. இது கடன்தாரரின் வாரிசுதாரருக்கும் பொருந்தும்.

| வ.எண் | கடன்தாரர் பெயர் | கடன் எண் | நிலுவைத் தொகை | கடன் தேதி |
|---|---|---|---|---|
| 1. | நந்தினி.B | 11130600008906 | ரூ.2,27,423.00 | 21.09.2020 |

இடம் : பெதப்பம்பட்டி
தேதி : 07-03-2023

கிளை மேலாளர்
பேங்க் ஆப் பரோடா, பெதப்பம்பட்டி கிளை

इंडियन बैंक Indian Bank
इलाहाबाद ALLAHABAD

Dated: 03/03/2023

APPENDIX - IV
(Rule-8(1)}

**POSSESSION NOTICE (for immovable property)**

Where as The undersigned being the Authorized Officer of the Indian Bank under the Securitization and Reconstruction of Financial, Assets and Enforcement of Security Interest Act 2002 and in exercise of powers conferred under Section 13 (12) read with, rule 8 and 9 of the Security Interest (Enforcement) Rules, 2002 issued a demand notice dated 06/09/2022 .Calling upon the borrower/Guarantor/s

1. **Mr.K.Veerabathiran** S/o Krishnan, Door No.89, Baguthampalayam, Ikkaraithathapalli, Sathyamangalam, Erode- 638 401 And
2. **Mrs.R.Yasotha** W/o Veerabathiran, Door No.89, Baguthampalayam, Ikkaraithathapalli, Sathyamangalam, Erode 638 401.

With our Sathyamangalam Branch to repay the amount mentioned in the notice being Rs.6,71,035 **(Rupees Six Lakhs Seventy One Thousand Thirty Five Rupees Only)** for outstanding as on 06.09.2022, within 60 days from the date of receipt of the said notice.

The borrower/Guarantor/s having failed to repay the total amount, We received Rs.1,41,600/- ( Rupees One Lakh Forty One thousand Six Hundred only), notice is hereby given to the borrower/ Guarantor/s and the public in general that the undersigned has taken possession of the property described herein below in exercise of powers conferred on him / her under Section 13 (4) of the said Act read with rule 8 and 9 of the said rules on this 6th day of September of the year 2022.

The borrower/Guarantor/s in particular and the public in general is hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of the Indian Bank for an amount of Rs. 6,71,035/- ( Rupees Six Lakhs Seventy One Thousand Thirty Five Rupees Only) as on 06/09/2022, and the said amount carries further interest and other charges at the agreed rate from 07/09/2022 till the date of repayment.

**DESCRIPTION OF THE IMMOVABLE PROPERTY (owner of the property-** Mr.K.Veerabathiran)
All that part and parcel of the property consisting of Land and Building situated at Door No 89/95, Natham S.F.No.184/2, New Natham No.219/19, House Site Patta No 110, Baguthampalayam Village Cusba, Sathyamangalam Taluk & Erode District in this house bounded on the

- North by Vacant Site of Saroja
- South by House of Lingappan
- East by House of Venkatarama Chettiar and Others
- West by North- South Road

East -West on the Northern Side Measures 11.20 Meter,
East-West on the Southern side measures 10.60 Meter,
North- South on the Eastern Side measures 20.8 Meter
North-South on the Western Side measures 0.8+6.6+12.60 Meter
Total extent of 251 Sq.meter vacant site along with tiled house Situated within the site and all other appurtenance thereon with mamool ways etc,

Date: 03.03.2023
Place: Sathyamangalam

**Authorised Officer/Chief Manager**
**Indian Bank**

KVB Karur Vysya Bank
Smart way to bank

**கரூர் - மண்டல அலுவலகம்**
No. 633 - 637, 1 வது தளம், ஜவஹர் பஜார்,
கரூர் – 639 001. Email: karurdo@kvbmail.com

**அசையா சொத்துக்கள் சுவாதீன அறிவிப்பு**
**விதி 8(1) பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள், 2002**

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் **(Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (Act 54 of 2002)**-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட **கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்**–ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவு மற்றும் விதி 3–ன்படி **26.12.2023** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் **(Demand Notice)** குறிப்பிடப்பட்ட கடன்பாக்கி தொகை **ரூ.29,36,357.59 (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து முப்பத்தாறாயிரத்து முன்னூற்று ஐம்பத்தேழு மற்றும் பைசா ஐம்பத்தொன்பது மட்டும்)**–ஐ மற்றும் வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று **(1) M/s.சத்யா ஏஜென்சீஸ் (கடன்தாரர்),** ஊஞ்சலூர் மெயின் ரோடு, தாமரைப்பாளையம், ஈரோடு – 638 152, **(2) திரு.M.சதீஷ் (ஜாமீன்தாரர்), த/பெ. K.முத்துசாமி,** 68, குமாரப்பாபுரம், மாரியம்மன் கோயில் புதூர், கொந்தளம் கிராமம், தாமரைப்பாளையம், ஊஞ்சலூர், ஈரோடு – 638 152, **(3) திரு. K.முத்துசாமி (மொத்த உரிமையாளர் / டைட்டில் ஹோல்டர்),** 68, குமரப்பபுரம், மாரியம்மன் கோயில் புதூர், கொந்தளம் கிராமம், தாமரைப்பாளையம், ஊஞ்சலூர், ஈரோடு – 638 152 ஆகியோர்களுக்கு அனுப்பப்பட்டது.

கடன் பெற்ற நபர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன் பெற்ற நபருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், விதி 8–ன்படியும், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை **02.03.2023** தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.

இது முதற்கொண்டு கடன் பெற்றவரோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், கரூர் மண்டல கிளைக்கு** வந்து சேரவேண்டிய கடன்தொகை **ரூ.29,36,357.59 (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து முப்பத்தாறாயிரத்து முன்னூற்று ஐம்பத்தேழு மற்றும் பைசா ஐம்பத்தொன்பது மட்டும்)** மற்றும் வட்டி, இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.**

**அசையா சொத்தின் விவரம்**

**சொத்து எண். 1 :** ஈரோடு பதிவு மாவட்டம், சிவகிரி சார் பதிவு மாவட்டம், கொடுமுடி வட்டம், கொந்தளம் கிராமம், பழைய **S.F.**எண். **654**, இதன் புதிய **R.S.**எண். **387/1**, புஞ்சை ஹெக்டேர் **1.02.0.** இதன் கிஸ்தி ரூ.**1.41**, பட்டா எண். **741**, எல்லைக்குப்பள்ளமேடு என்று அழைக்கப்படுகிறது. துணைப்பிரிவுக்குப் பிறகு இதன் **R.S.**எண். **387/1A.** இச்சொத்து பின்வரும் நான்கெல்லைகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது.

**நான்கெல்லைகள் :** குமாரப்புரம் திரு.மணி பாகபூமிக்கும், க.ச.387/1ல் பொன்னம்மாள் பாகபூமிகளுக்கும் மற்றும் 17 அடி அகலத்தில் தெற்கே அறச்சலூர்–கொடுமுடி தார்ச்சாலையிலிருந்து வடக்கே பிரிந்து வந்து வடமேற்காக திரும்பும் வண்டிப்பாதைக்கும் வடக்கு, மேலே கண்ட 17 அடி அகல வண்டிப்பாதைக்கும், திரு.நாச்சிமுத்து பாகபூமிக்கும் கிழக்கு, திரு.நாச்சிமுத்து பாகபூமிக்கும் தெற்கு, திரு.K.N. சுப்பிரமணியம் பாகபூமிகளுக்கும் மேற்கு.

**இதன் அளவு : 0.21** ஏக்கர் அதாவது **9135** சதுரடி பரப்பு கொண்ட நிலம் மற்றும் அதன் மேல் கட்டப்பட்ட கட்டடத்தின் கதவு எண். **180** அமைந்துள்ள தாமரைப்பாளையம் மற்றும் அனைத்து சாலைகளை பயன்படுத்தும் உரிமைகள் மற்றும் அனைத்து வழிதட உரிமைகள் உட்பட.

**சொத்து எண். 2 :** ஈரோடு பதிவு மாவட்டம், சிவகிரி சார் பதிவு மாவட்டம், கொடுமுடி வட்டம், இச்சிப்பாளையம் கிராமம், பழைய **S.F.**எண். **43/B**–இல் உள்ள **R.S.**எண். **62/2**ல் அமைந்துள்ள புஞ்சை ஹெக்டேர் **0.55.0.** துணைப்பிரிவுக்கு பிறகு இதன் **R.S.**எண். **62/2H1** மற்றும் அதன் நத்தம் **R.S.**எண். **61/7** ல் உள்ள சொத்து பின்வரும் நான்கெல்லைகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது.

**நான்கெல்லைகள் : D.**கணோசனின் பிற நிலத்துக்கு கிழக்கு, தெற்கு மற்றும் வடக்காக, தென்வடல் தாமரைப்பாளையம் – ஊஞ்சலூர் ஊராட்சி சாலைக்கு மேற்காக.

**இதன் அளவு : 0.02** ஏக்கர் அதாவது, **870** சதுரடி பரப்பு கொண்ட நிலம் மற்றும் பல மில் கட்டிடம் அமைந்துள்ள தாமரைப்பாளையத்தில் உள்ள கட்டிடத்தின் கதவு எண். **161** மற்றும் அனைத்து சாலைகளை பயன்படுத்தும் உரிமைகள் மற்றும் வழிதட பாத்தியங்கள் உள்பட. இச்சொத்து இச்சிப்பாளையம் ஊராட்சிக்குள்பட்டது.

இடம் : கரூர்
தேதி : 02.03.2023

அதிகாரம் பெற்ற அதிகாரி,
கரூர் வைஸ்யா பேங்க் லிட்.,